DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No. 56/2020**

P.W.2 முருகையா த/பெ. சுப்பையா நாள் – 20.02.2023

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். அப்போது சாட்சி பின்னிட்டு சொல்லுகிறார்.

**(சாட்சி – எனக்கு 65 வயது ஆகிறது. நேற்று நான் வயலில் நான் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருக்கும் போது முதல் எதிரி ஆறுமுகம் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன், சாட்சி சொல்லப்போறியா என்று மிரட்டினார் என்று சாட்சி சொல்லுகிறார், எனக்கு பாதுகாப்பு வேண்டும் என்று சாட்சி சொல்லுகிறார்.)**

**முதல் எதிரி ஆறுமுகத்தை இது சம்மந்தாக கேட்ட போது ஆறுமுகம் பின்வருமாறு சொல்லுகிறார்.**
**என்னுடைய வயலில் கடலை போட்டிருக்கிறேன், நான் ரோட்டு ஓரமாக போய்க்கொண்டிருந்தேன், சாட்சி எனக்கு எதிராக கொலை மிரட்டல் விடுத்ததாக பொய்யாக சொல்லுகிறார் என்று பதில் அளிக்கிறார்.**

**இதுசம்மந்தமாக சாட்சி சொன்ன புகார் சம்மந்தமாக எதிரியிடம் கேட்ட போது எதிரி அதை மறுத்து விட்டதால் இது சம்மந்தமாக எதிரியை கண்டித்து விடப்பட்டது. பின்னிட்டு பிரச்சினை இருந்தால் நீதிமன்றத்தில் தெரிவிக்கும்படி அல்லது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் படி அறிவுறுத்தப்பட்டது.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No. 56/2020**

P.W.2 முருகையா த/பெ. சுப்பையா நாள் – 20.02.2023

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

என்னுடைய வீட்டில் இருந்து காவல் நிலையத்திற்கு 10 நிமிடத்தில் போய் விடலாமாஎன்றால் சாட்சி போக முடியாது 6 கீ.மீ. தொலைவு இருக்கிறது என்று பதில் அளிக்கிறார். எதாவது அசம்பாவிதம் குற்றச்செயல் என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியும். நான் இன்று இந்நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வருகிறோமே என்று காவல் நிலையம் செல்லவில்லை என்று பதில் அளிக்கிறார். நான் வசிக்கும் இடம் மேற்கு புறமும் என் தம்பி/ முதல் எதிரி ஆறுமுகத்தின் வீடு கீழ் புறமும் இருக்கிறது என்றால் சரிதான், இரண்டுமே தெற்கு பார்த்த வீடுகள் என்றால் சரிதான். ஆஸ்பெஸ்டாஸ் சீட்டு போட்ட வீட்டிலும் அவர்களுடைய மற்றொரு வீட்டிலும் வசித்து வந்தார்கள். நாங்கள் பாதையை தான் கேட்டோம். எங்கள் வீட்டிற்கு கிழக்கில் முதல் எதிரி வசித்து வரக்கூடிய வீடு புதிதாக கட்டப்பட்ட வீடு என்றால் சரிதான். வீட்டை புதிதாக கட்டிக் கொண்டு அங்கு போன பிறகு ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட வீட்டை அகற்றி விடுவதாக முதல் எதிரி சொன்னார் என்றால் சாட்சி முதல் எதிரி ஆறு மாதம் மட்டுமே காலக்கெடு கேட்டார், ஆனால் அதை அகற்றவில்லை என்று பதில் அளிக்கிறார். என்னுடைய சின்ன மகனுக்கு ஒரு வீடு கட்ட வேண்டும் என்று நானும் என்னுடைய பெரிய மகனும் வீட்டில் பேசிக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அப்போது என் மருமகள் தேவியும் வீட்டில் தான் இருந்தார் என்று சாட்சி பதில் அளிக்கிறார். எதிரிகள் ஆஸ்பெஸ்டாஸ் கூரை வீட்டை இன்னும் அகற்றவில்லை என்பதால் அதை அகற்றாமல் வீடு கட்டினால் அசௌகரியமாக இருக்கும் என்று நான் சொன்னேன். எங்கள் வீட்டிற்கு முன்பாக கடலைச்செடி போர் போட்டிருக்கிறோம் என்றால் சரிதான். மாடுகளுக்கான கழநீர் தொட்டி வீட்டோடு, வீட்டை ஒட்டி இருக்கிறது. கடலைச்செடி பட்டறை போடுவதற்கு அடியில் கட்டைகள் வைத்து தான் கடலைச்செடி பட்டறை போட்டிருக்கிறோம் என்றால் சரிதான். தென்புறம் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் கூரை கொட்டகையை வெகுநாள் ஆகியும் 1ம் எதிரி அகற்ற வில்லை என்பதால் எங்களுடைய போக்குவரத்து பாதைக்கு அசௌகரியம் ஏற்படுத்தியதால் எங்களுக்கு வீடு கட்ட முடியாமல் அவஸ்த்தை படுவதாக நான் சொன்னவுடன் உணர்ச்சி வசப்பட்டு கோபம் அடைந்த என் மகன் பாண்டிச்செல்வம் கடலைச்செடி பட்டறையில் இருந்த கம்பை/கட்டையை எடுத்துக் கொண்டு எதிரிகள் வீட்டிற்கு சென்று 1ம் எதிரி ஆறுமுகத்தின் இடது கையை அந்த கட்டையால் கொடுரமாக தாக்கினார் என்றாலும் அதனால் அவருடைய இடது கை எலும்பு முறிந்து கீழே

தொங்கியது என்றாலும் முதல் எதிரி தடுக்க முற்பட்ட போது முதல் எதிரியின் முகத்தில் அடித்து முதல் எதிரியின் முன்பக்க நான்கு பற்கள் பாதிக்கப்பட்டது என்றாலும் அதனால் மயக்கமுற்ற முதல் எதிரி கீழே விழுந்து விட்டார் என்றாலும் தன்னுடைய செயலால் கீழே விழுந்த முதல் ்எதிரி இறந்து விட்டார் என்ற பயத்தினாலும் பதற்றத்தினாலும் வீட்டிற்கு ஓடி வந்த என்னுடைய மகன் அங்கிருந்த கூர்மையான கற்களால் அமைக்கப்பட்டிருந்த மாட்டு கழநீர் தொட்டியில் விழுந்து அதனால் தான் என் மகனுக்கு காயங்கள் ஏற்பட்டது என்றாலும் சாட்சி சரியல்ல என்றும் மேலும் சாட்சி தானாக முன்வந்து நானும் என் மகனும் என் மருமகளும் வீட்டிற்குள் பேசிக்கொண்டிருக்கும் போது நீலகண்ட மூர்த்தி தவறான வார்த்தைகளால் தேவுடியா பயலே உனக்கு இங்கே ஏதுடா பாதை என்று சொல்லி என் மகனை வாடா வெளியிலே என்று அழைத்து கம்பால்/கட்டையால் நீலகண்டமூர்த்தி என் மகனின் பின்னந்தலையில் ஒரே அடியாக இரண்டு முறை அடித்தார் என்றும் என்னுடைய இடது தோள்பட்டையிலும் கட்டையால் அடித்தார் என்றும் சாட்சி பதில் அளிக்கிறார். எதிரிகள் மூவரும் ஆலங்குடி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றால் சாட்சி அது பற்றி எனக்கு தெரியவில்லை என்று பதில் அளிக்கிறார். புதுக்கோட்டை மருத்துவமனையில் முதல் எதிரி 4 மாதம் சிகிச்சை எடுத்துக் கொண்டது பற்றியும் இரண்டாம் எதிரி 10−15 நாட்கள், மூன்றாம் எதிரி 1 வார காலம் சிகிச்சை எடுத்துக்கொண்டது பற்றி எனக்கு தெரியாது. என் மகன் பதற்றத்தில் மாட்டு கழநீர் தொட்டியில் வந்து விழுந்த பிறகு தான் எனக்கு விபரம்தெரிந்து நான் சென்று 1 முதல் 3 எதிரிகளையும் தாக்கினேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு அக்கம் பக்கம் ஊர்க்காரர்கள் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் நானும் என் மகனும் மட்டும் தான் பேசிக்கொண்டிருந்தோம் என்றாலும் அப்போது என் மருமகள் வீட்டில் இல்லை என்றால் சரியல்ல, மூவரும் வீட்டில் இருந்தோம் என்று பதில் அளிக்கிறார். ஆரஸ்பதி கட்டைகளை எடுத்தது பற்றி போலிசார் தான் சொன்னார்கள், நாங்கள் மருத்துவமனையில் இருந்தோம் என்று பதில் அளிக்கிறார். என்னை முகத்தில் வலது பக்கம் தாக்கியதாகவும் நாங்கள் கூப்பிட்ட போது யாரும் உதவிக்கு வரவில்லை என்றும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கொஞ்சம் நிதானமாக இருந்ததால் இருசக்கர வாகனத்தில் என் மகனை உட்கார வைத்து நான் பிடித்து கொண்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய போலிசார் விசாரணையில் என்னை எதிரிகளை பின்மண்டையில் தாக்கியதாகவும் ஆலங்குடி காவல் நிலையத்திற்கு என் மகன் இறந்துவிட்ட ்விபரத்தை சொல்லி தெரியப்படுத்தினேன் என்றும் ஆலங்குடி போலிசார் திருச்சி நியூரோ மருத்துவமனைக்கு 4.30 மணிக்கு வந்து விட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகன் சடலக்கூராய்வு 10.04.2019 அன்று நடந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் அதில் உண்மை இல்லை என்றாலும் நான்தான் எதிரியை தாக்கினேன் என்றாலும் அதனால் தான் காவல் நிலையத்தில் 7 நாட்களுக்கு உள்ளேயே புகார் கொடுக்கவில்லை என்றாலும் சம்பவம் பொய் என்பதால் தான்

என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளவர்கள் சாட்சியாக இல்லை என்றாலும் சரியல்ல. பாதை பிரச்சினை இன்னமும் இருந்து வருவதால் தான் பின் யோசனை செய்து எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்குள்ள அரசியல் பலத்தை பயன்படுத்தி எதிரிகள் எங்களுக்கு எதிராக வழக்கு செய்யாமல் பார்த்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. அரசு தரப்பு சாட்சிகள் எனக்கு வேண்டியவர்கள் பங்காளிகள் என்று சொன்னால் சரியல்ல. என் மகனை இருசக்கர வாகனத்தில் அழைத்து செல்லும் போது இடையில் விழுந்ததால் தான் என் மகனுக்கு காயம் ஏற்பட்டது என்றால்சரியல்ல. என் மகனின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமமும் இல்லை என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No. 56/2020**

P.W. 4 குபேந்திரன் த/பெ. வடிவேல் நாள் – 20.02.2023

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் இறந்த பாண்டிச்செல்வத்தின் மனைவி தேவியினுடைய அண்ணன் என்றால் சரிதான். என் தங்கையின் வீட்டில் இருந்து 20 கி.மீ. தொலைவில் வடக்கே என்னுடைய வீடு இருக்கிறது. சம்பவம் நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. கேள்விப்பட்டு தான் சொல்லுகிறேன். என்னுடைய தங்கை தேவி எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னதாக நான் போலிசில் சொல்லவில்லை, நீதிமன்றத்தில் தான் சொல்லுகிறேன். நான் பாண்டிச்செல்வத்தின் சிகிச்சைக்காக ஆலங்குடி அரசு மருத்துவமனை, தஞ்சாவூர் விநோதகன் மருத்துவமனை, திருச்சி நியூரோ மருத்துவமனைக்கு சென்றதாக போலிஸ் என்னை விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சாட்சி ஆலங்குடி அரசு மருத்துவமனை, தஞ்சாவூர் விநோதகன் மருத்துவமனைக்கு போன விபரங்களை விநோதகன் மருத்துவமனையில் போலிசார் விசாரிக்கும் போது சொன்னேன் என்று பதில் அளிக்கிறார். நான் மேற்படி மூன்று மருத்துவமனைக்கும் பாண்டிச்செல்வம் சிகிச்சைக்காக சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும் என் தங்கையும் மாமனாரும் கேட்டுக் கொண்டதற்காக உண்மைகளை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் மேலும் சாட்சி என் தங்கை அழுது கொண்டே தகவல் சொல்லி பின்னிட்டு நான் மருத்துவமனைக்கு சென்ற விபரம் எனக்கு நேரிட்ட விபரங்களை பொறுத்து தான் சாட்சியம் சொல்லியுள்ளேன் என்று பதில் அளிக்கிறார்.

*Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him/her to be correct.*

*Sessions Judge,
Additional District Court,
Pudukkottai.*